செ. வெ. எண்: 434 நாள்: 27.05.2010

--------

தமிழ்நாடு அரசு, சிறுசேமிப்புத் துறை சிறுசேமிப்புத் திட்ட விளம்பரங்களுடன் கூடிய 38 உயரிய தொழில் நுட்பப் பொழுதுப் போக்குக் குறும்படங்களைத் தயாரித்துள்ளது. (High Definition Short film) இக்குறும்படங்களை **19.05.2010** அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இக்குறும்படங்கள் பெசன்ட் நகர் எல்லியட்ஸ் கடற்கரையில் **19.05.2010** முதல் **18.6.2010** வரை நாள்தோறும் 4 படங்கள் வீதம் (ஒவ்வொரு படமும் 30 நிமிடம் முதல் 40 நிமிடம் வரை ஓடக்கூடியது) பொதுமக்களுக்கு 35 அடி நீளம் 19 அடி உயரம் அகன்ற திரையில் காண்பிக்கப்பட்டு வருகிறது.

வருகிற **29.05.2010 சனிக்கிழமை** மாலை 06.15 மணிக்கு பத்திரிக்கையாளர்களுக்கு இந்த விளம்பர உத்தி குறித்து விளக்கமளித்து இக்குறும்படங்களைக் காண்பித்து ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை பெசன்ட்நகர் எல்லியட்ஸ் கடற்கரை மணலில் வைத்து நடத்த உள்ளோம். தங்கள் நிருபரை அனுப்பி இக்குறும்படங்களைப் பார்வையிட்டு, இது குறித்த விபரங்களை / மதிப்பீடுகளை தங்கள் பத்திரிக்கையில் /நாளிதழ்/வார/மாத இதழ்களில் பொதுமக்கள் பயன்பெற வெளியிடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இடம் : **எல்லியட்ஸ் கடற்கரை** – உடற்பயிற்சி கூடத்திற்கு அருகில்

நேரம் : 29–05–2010 சனிக்கிழமை அன்று சரியாக 06.15 மணி
முதல் 06.50 வரை பத்திரிக்கையாளர் சந்திப்பு.
மாலை 06.50 முதல் 09.00 மணி வரை 4 குறும்படங்கள்
காண்பிக்கப்படும்.

ஒம்/– x x x x,
ஆணையர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9